**செய்தி குறிப்பு எண் 178** **நாள் 29.12.007**

**மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் செய்திக்குறிப்பு**

**வேளாண்மைத்துறை மறு சீரமைப்பு**

உழவர் பெருமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், பெருகிவரும் மக்கள் தொகைக்கேற்ப உணவு உற்பத்தியை பெருக்க வேண்டியது அரசின் கடமை என்பதால், அவ்வப்போது கண்டறியப்படும் வேளாண் தொழில் நுட்பங்கள் விரைவில் விவசாயிகளை சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்தோடு துறையில் தற்போது நடைமுறையில் இருக்கும் மூன்றடுக்கு நிர்வாக அமைப்பு இரண்டு அடுக்கு நிர்வாக அமைப்பாக மாற்றி மறு சீரமைப்பு செய்யப்படுகிறது. இதன்படி வேளாண்மை மற்றும் அதன் சகோதர துறைகளான, தோட்டக்கலை, விதை சான்றளிப்பு, வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிக துறைகளில் தொழில் நுட்பங்கள் அனைத்தும் ஒன்றிய அளவில் ஒரே இடத்தில் கிடைக்க வழி வகை செய்யப்படுகிறது.

விவசாயிகளின் நலன் காக்கும் வேளாண்மை அலுவலர்கள் முனைப்புடன் செயலாற்ற வேளாண்மை துறையில் பதவி உயர்வில் இருந்த தேக்க நிலை இவ்வரசு பொறுப்பேற்ற பின்பு களையப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், அரசு ஊழியர்களுக்கு பல்வேறு சலுகைகள் அளித்து வருகிறார்.

வேளாண்மைத் துறை மறு சீரமைக்கப்படும் நிலையில் பல ஆண்டுகளுக்கும் மேலாக பதவி உயர்வு இன்றி இருந்த வேளாண்மை, தோட்டக்கலை, அலுவலர்களுக்காக விதிகளை தளர்த்தி இந்நிதி ஆண்டில் 33 வேளாண்மை துணை இயக்குநர்களுக்கும், 93 வேளாண்மை உதவி இயக்குநர்களுக்கும், 509 வேளாண்மை அலுவலர்களுக்கும் பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளது. மேலும் இவ்வாண்டில் 181 வேளாண்மை

அலுவலர்களுக்கும், 16 தோட்டக்கலை அலுவலர்களுக்கும், வேளாண் அலுவலர் (இரசாயனம்) பிரிவில் 33 அலுவலர்களுக்கும் வேளாண்மை உதவி இயக்குநர் / தோட்டக்கலை உதவி இயக்குநர்களாக முறையான பதவி உயர்வு அளிக்கப்பட்டது. வேளாண்மைத் துறையில் ஆதார பணியாளர்களான 1022 உதவி வேளாண்மை அலுவலர்களுக்கு பதவி உயர்வுகளும், வேளாண்மைப் பொறியியல் துறையில் 453 உதவி மண்வள பாதுகாப்பு அலுவலர்களுக்கும், 14 செயற் பொறியாளர்களுக்கும் பதவி உயர்வு அளிக்கப்பட்டது. மேலும் வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண்மைப் பொறியியல், விதை சான்று, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம் ஆகிய துறைகளில் 2007–2008 ஆம் ஆண்டு வரை அரசு அளவிலாள அனைத்து நிலை பதவிகளுக்கும் பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளது. பதவி உயர்வில் தேக்கநிலை என்பது அறவே இல்லை.

<u>**வளர்ச்சி திட்டப் பணிகள்**</u>

தமிழக அரசு வேளாண்மைத் துறையில் பல்வேறு நிலைகளில் இந்த ஆண்டில் மட்டும் 2354 அலுவலர்களுக்கு பதவி உயர்வு அளித்து அவர்களது வாழ்க்கைத் தரம் உயர்த்தப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டு, அனைத்து அலுவலர்களும், வேளாண்மைத் துறையின் கீழ் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டப் பணிகளின் விவரங்களையும், சலுகைகளையும், உழவர் பெருமக்களை சென்றடைய அயராது பாடுபட வேண்டும் என தெரிவித்துக் கொள்கிறேன்.

வெளியீடு, இயக்குநர்

செய்தி மக்கள் தொடர்புத்துறை

தலைமைச்செயலகம், சென்னை 9